# காயல்பட்டிணம் நகராட்சி

நாள்: 01.10.2010

காயல்பட்டிணம் நகராட்சியின் சாதாரண கூட்டம் 06.10.2010 ம் தேதி **வெள்ளி கிழமை** மாலை 4.30 மணிக்கு நகராட்சி மன்ற கூட்டரங்கில் வைத்து நகர்மன்ற தலைவர் திரு வாவு சா.செய்யிது அப்தூர் ரஹ்மான் அவர்கள் தலைமையில் நடைபெறும். எனவே உபதலைவர் மற்றும் உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் எண்: 1

**காயல்பட்டணம் நகராட்சிக்கு நகர் மேம்பாட்டு திட்டம் வரைவு இறுதி அறிக்கையின்படி** (City Development Plan - Draft Final Report) **பரிந்துரை செய்யப்பட்டுள்ள கீழ்காணும் விவரப்படியான மேம்பாட்டு பணிகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு**

| | |
|---|---|
| 1 | Solid Waste Management Tools and Equipment |
| 2 | Drains |
| 3 | Slums/urban poor development projects |
| 4 | Water supply and distribution |
| 5 | Sewerage |
| 6 | Road & Urban transport |
| 7 | Street Lighting |
| 8 | E-Governance/Land use/Dev planning |
| 9 | Others |

**செயல் அலுவலர் குறிப்பு**

**நகர மேம்பாட்டிற்காக மேற்படி பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆதலால் மன்றம் இப்பொருளை சிறப்பினமாக கருதி அனுமதிக்கலாம்**

பொருள் எண் 2

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் அமையப்பட்டுள்ள கடற்கரை பூங்காவை தங்கள் சொந்த செலவில் பராமரிப்பு செய்வதற்கு அனுமதி வேண்டி Screw Driver என்ற நிறுவனம் மனு அளித்துள்ளது. மனு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

செயல் அலுவலர் குறிப்பு
கடற்கரை பூங்காவை பராமரிப்பு செய்வதற்கு அனுமதி வழங்கலாம்

பொருள் எண் 3

காயல்பட்டணம் நகராட்சியில் 2010–2011–ம் ஆண்டிற்கு குடிநீர் திட்டத்திற்கு தமிழக அரசால் மதிப்பீடு 29.67 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குடிநீர் திட்ட பணிகளுக்கு அனுமதி வேண்டி விமானம் மூலம் டெல்லி சென்ற செயல் அலுவலர் மற்றும் பணி மேற்பார்வையாளர் பயணப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

நகர்மன்ற தலைவர்
மூன்றாம்நிலை நகராட்சி
காயல்பட்டிணம்